
# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 2: மீண்டும் எருசலேமுக்கு

லூக்கா 24:13-35

### நடந்த கதை . . .

இயேசுவின் சீடர்கள் செய்வதறியாது திகைத்தார்கள். தேவனுடைய புதிய ராஜ்யம்பற்றி அவர்களுக்கிருந்த கனவுகளும் எதிர்பார்ப்புகளும் முந்தின வெள்ளிக்கிழமையில் சிலுவையில் அறையப்பட்டன. கிலெயோப்பாவும் அவருடைய நண்பனும் துக்கத்தோடும் குழப்பத்தோடும் எருசலேமிலிருந்து ஏழு மைல் தொலைவிலிருந்த எம்மாவூர் எனும் சிற்றூருக்குக் கரடுமுரடான சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை சாயங்கால வேளை; சூரியன் மறைந்துகொண்டிருந்தது; அப்போது, முன்பின் தெரியாத ஒருவர் அவர்களை நோக்கி வந்தார். உயிர்த்தெழுந்த ஆண்டவர்தாமே வந்திருந்தது அவர்களுக்குத் தெரியாது. வந்திருந்தவரின் பேச்சு காதில் ஏறாதபடி, நொந்துபோயிருந்த அந்த இரு சீடர்களும் முந்தின வார இறுதியில் நடந்த நிகழ்ச்சிபற்றியே மீண்டும்மீண்டும் பேசினார்கள்; நம்பிக்கையிழந்து காணப்பட்டார்கள். இயேசு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்; நொந்துபோயிருந்த தம் சிநேகிதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்த அவருக்கு ஆசையாக இருந்தது. ஆனால், தாம் யார் என்று ஆண்டவர் வேண்டுமென்றேதான் சொல்லவில்லை; ஏனெனில் அவர்கள் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. அந்த இரு உண்மைச் சீடர்களுக்கும் தாம் யார் என்று கிறிஸ்து அப்போது வெளிப்படுத்தியிருந்தால், சந்தோஷத்தில் மிதந்திருப்பார்கள்; ஆனால், அவர் சொல்லவிரும்பிய முக்கியச் சத்தியங்கள் அவர்களுடைய காதுகளில் ஏறியிருக்காது. அவருடைய போதகங்களையும் பிரசங்கங்களையும் மூன்றரை வருடங்கள் அவர்கள் கேட்டிருந்தாலும், அவருடைய ஊழியம் எப்படிப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. ‘மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும்; கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம் சீஷர்களுக்குப் போதித்திருந்தார். அவர்களோ அதை அறியவில்லை, அதைக் குறித்து அவரிடத்தில் கேட்கவும் பயந்தார்கள்.’ மாற்கு 9:31,32.



சோகமாக இருந்தவர்களிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார். அடுத்த இரண்டு மணி நேரம், அநேக வேத வாக்கியங்களையும் தீர்க்கதரிசனங்களையும் விளங்கிக்கொள்வதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறினார்.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. எவ்வளவு வேதவாக்கியங்களை நாம் விசுவாசிக்கவேண்டும்?**

**லூக்கா 24:25.** *தீர்க்கதரிசிகள் சொன்ன* ________________ *விசுவாசி.*

**2தீமோத்தேயு 3:16.** ____________________ *தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.*

**குறிப்பு:** தேவனுடைய பரிசுத்த சத்தியங்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் எழுதப்பட்டுள்ளன. வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசன விளக்கக்குறிப்புகள் பழைய ஏற்பாட்டுக் கதைகளில்தான் விசேஷமாக உள்ளன. உதாரணமாக, வெளிப்படுத்தலில் உள்ள 404 வசனங்களில் 278 வசனங்கள் பழைய ஏற்பாட்டுச் சம்பவங்கள் அல்லது தீர்க்கதரினங்களின் பிரதிபலிப்புகள்.

**2. வேதவாக்கியங்களும் தீர்க்கதரிசனங்களும் யாரை வெளிப்படுத்துவதாக இயேசு சொன்னார்?**

**யோவான் 5:39.** *வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்.* ______________ *குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.*

**வெளிப்படுத்தல் 1:1.** *சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன்* ________________ *ஒப்புவித்ததும் வெளிப்படுத்தினதுமான விசேஷம்.*

**குறிப்பு:** சகல வேதவாக்கியம்–தீர்க்கதரிசனங்களின் மையம் இயேசுதான். வாசிக்க இனிமையான இந்தப் பாடத்தொடரில், பல தீர்க்கதரிசனங்களின் விளக்கங்களைப் பார்ப்போம்; ஆனாலும், தானியேல்–வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசனங்கள் இயேசுவையே சுட்டிக்காட்டுகின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

**3. வேதாகமத்தில் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேறொரு பெயர் என்ன?**

**யோவான் 1:1.** *ஆதியிலே* ________________ *இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.*

**யோவான் 1:14.** *அந்த* ______________ *மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார்.*

**4. வேதாகமத்தை எழுத தேவன் எப்படிப்பட்டவர்களைப் பயன்படுத்தினார்?**

**2பேதுரு 1:21.** *தேவனுடைய* ____________ *மனுஷர்கள் பரிசுத்த ஆவியினலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.*

**5. இயேசுவை அறிவதால் நித்திய ஜீவன் கிடைக்கிறது. யோவான் 17:3. இயேசுவின் சீடர்கள் அவரை எவ்வாறு அறிந்திருந்தார்கள்?**

**லூக்கா 24:27,45.** *மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும்* ____________ *குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.* ______________________ *அறிந்து கொள்ளும்படி, அவர்களுடைய மனதை அவர் திறந்(தார்).*

**குறிப்பு:** வேதாகமத்தில் ‘அப்பம்’, தேவவார்த்தைக்கு அடையாளமாக இருக்கிறது. “மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே” என்று இயேசு சொன்னார். மத்தேயு 4:4. வேத வாக்கியங்களை வாசித்து, தியானித்து, அவற்றைப் பின்பற்றும்போது பெலமும் சந்தோஷமும் சமாதானமும் நித்திய வாழ்வும் பெற்றுக்கொள்வோம்.



**6. கிறிஸ்தவர்களுக்கு வேதஆராய்ச்சி எவ்வளவு முக்கியமானதாக இருக்க வேண்டும்?**

**யோபு 23:12.** *அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும்* ________________ *காத்துக்கொண்டேன்.*

**சங்கீதம் 119:105.** *உம்முடைய வசனம் என் கால்களுக்குத்* __________, *என் பாதைக்கு* ________________________.

**குறிப்பு:** பிசாசுக்கு வேதாகமத்தைப் பிடிக்காது. மக்கள் அதை வாசிக்காமல் தடுப்பதற்கு அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான். மனிதர்களை வஞ்சிக்க அவன் போடும் திட்டங்களைத் தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுத்துவது அவனுக்குத் தெரியும். இந்தப் பாடத்தொடரைப் படிக்கவிடாமல் சாத்தான் உங்கள் கவனங்களைத் திசைதிருப்பினாலோ, வேறு விஷயங்களில் உங்களை மூழ்கும்படிச் செய்தாலோ நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். சத்தியத்தை அறிய விரும்புகிறவர்களுக்கு அதற்கான ஒரு வழியை ஆண்டவர் உண்டுபண்ணுவார்.

**7. நாம் வேதாகமத்தைப் புரிந்துகொள்ள உதவிசெய்கிறவர் யார்?**

**யோவான் 16:13.** *சத்திய* ________________ *அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.*

**யோவான் 14:26.** ________________ *தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதி(ப்பார்).*

**1கொரிந்தியர் 2:13.** *நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி* ____________ *வார்த்தைகளாலே பேசு(கிறோம்).*

**8. வேத ஆராய்ச்சியின்போது பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவுவதை நான் எவ்வாறு நிச்சயமாக அறியலாம்?**

**லூக்கா 11:9.** *மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது:* ____________, *அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.*

**லூக்கா 11:13.** *பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர்* ______________________________ *பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.*

**யோவான் 7:17.** ____________ ____________ *செய்யமனதுள்ளவன் எவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதா என்று அறிந்து கொள்ளுவான்.*

**குறிப்பு:** வேதவாக்கியங்களின் சத்தியத்தை நாம் புரிந்துகொள்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்கிறார். எனவே, வேதப்புத்தகத்தைத் திறந்து வாசிப்பதற்கு முன் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக நாம் ஜெபிக்கவேண்டும். என் வேதஆராய்ச்சியின்போது பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவுவதை எப்போது நான் நிச்சயமாக அறியலாம்?

1) அவர் என்னை வழிநடத்தும்படி நான் கேட்டால்
2) அவர் வெளிப்படுத்தும் சத்தியத்தைப் பின்பற்ற நான் ஆயத்தமாக இருந்தால்

**9. வார்த்தையை ஜெபத்தோடு தியானிப்பதால் நமக்கு என்ன பயன் உண்டு?**

**சங்கீதம் 119:11.** *நான் உமக்கு விரோதமாய்ப்* ________________, *உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

**எரேமியா 33:3.** *என்னை நோக்கி கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு* __________ *கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான* ________________ *உனக்கு அறிவிப்பேன்.*

**ரோமர் 15:4.** *நாம்* __________*யுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப்* ________________ *எழுதியிருக்கிறது.*

**யாக்கோபு 1:5.** *உங்களில் ஒருவன்* ____________ *குறைவுள்ளவனாயிருந்தால், ... தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.*

**10. வேதவாக்கியங்களை எவ்விதம் ஆராயவேண்டுமென்று வேதாகமம் கூறுகிறது?**

**ஏசாயா 28:10.** *கற்பனையின்மேல் ________________, ...
பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்.*

**1கொரிந்தியர் 2:13.** *பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே ____________ காண்பிக்கிறோம்.*

**2பேதுரு 1:20.** *வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் ________________ பொருளையுடையதாயிராது.*

**குறிப்பு:** சொந்தக்கருத்துகளை ஒதுக்கவேண்டும்; ஒரு விஷயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து வசனங்கைளயும் (இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்) வாசிக்கவேண்டும்; வசனங்களை ஒன்றோடு ஒன்று ஒப்பிடவேண்டும். வேதாகமம் பேச அனுமதிக்கவேண்டும். அப்போது, சத்தியம் தெளிவாக வெளிப்படும். எம்மாவூருக்குச் செல்லும் வழியில் தாம் சந்தித்த அந்த இரு சீடர்களுக்கும், தாம் மேசியா என்பதை இயேசு அப்படித்தான் நம்பவைத்தார். லூக்கா 24:27.

**11. வேதாகமத்தை ஆராய்வதால் நம்மில் என்ன நிகழுகிறது?**

**2தீமோத்தேயு 3:15.** *கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை ____________கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்து'க்கள்.*

**குறிப்பு:** தேவனுடைய இரட்சிப்பின் மகத்தான திட்டத்தை நாம் புரிந்துகொள்ள வேதவாக்கியங்கள் உதவுகின்றன; அழியும் தன்மையுள்ள மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தகவல் இது.

**12. நாம் சத்தியத்தை எங்கே காணலாமென்று இயேசு கூறினார்?**

**யோவான் 14:6.** *அதற்கு இயேசு: நானே வழியும் ______________ ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்.*

**யோவான் 17:17.** *உம்முடைய ____________ சத்தியம்.*

**குறிப்பு:** தேவவார்த்தையான வேதாகமத்தில் சத்தியம் உள்ளது. இன்றைய உலகில் சத்தியம் காண்பதற்கரிய ஒரு பொருளாகி விட்டது. அதனால் பூமியிலுள்ள அனைவருமே அதன் பாதிப்பிற்கு ஆளாகின்றனர். பிரயோஜனமுள்ள ஒவ்வொரு விஷயம்பற்றிய உண்மையையும் வேதாகமத்தில் காணலாம். அதன் ஆலோசனைகளை அறிந்து, பின்பற்றினால் விடுதலை கிடைக்கும். யோவான் 8:32; அது சந்தோஷத்தையும் பரிபூரண வாழ்க்கையையும் தரும். யோவான் 15:11.

**13. வேத ஆராய்ச்சி சம்பந்தமாக வேதாகமத்தில் என்ன எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன?**

**2 தீமோத்தேயு 2:15.** *சத்திய வசனத்தை நிதானமாய்ப் ________________ ____________ உன்னைத் தேவனுக்குமுன்பாக உத்தமனாக நிறுத்தும்படிக்கு ஜாக்கிரதையாயிரு (ஆராய்ச்சி செய்).*

**2பேதுரு 3:16.** *எல்லா நிருபங்களிலும் ... அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் ____________போலத் தங்களுக்குக் ________________ இவைகளையும் புரட்டுகிறார்கள்.*

**குறிப்பு:** சத்தியவசனத்தை 'நிதானமாய்ப் படித்து' என்றால், உள்ளபடியே சரியாக அர்த்தங்காண்பதாகும். கருத்துக்கு ஏற்றபடி வேதாகமத்தைத் திரித்துக்கூறுவதில் பெரிய ஆபத்து இருக்கிறது. வேதாகமம் பற்றி நாம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. வேதாகமம் தன்னைப்பற்றி என்ன சொல்கிறது என்பதுதான் முக்கியம்.

**14. சகல கிறிஸ்தவப் போதனைகளையும் கொள்கைகளையும் நாம் எவ்வாறு சோதித்தறியவேண்டும்?**

**அப்போஸ்தலர் 17:11.** *மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ________________.*



**ஏசாயா 8:20.** *____________யும் ________________யும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.*

**குறிப்பு:** ஒவ்வொரு போதனையையும் வேதாகமத்தைவைத்து சோதித்தறியவேண்டும். வேதவாக்கியங்களோடு ஒத்துப்போகாத போதனை பொய்யானது. அதை ஒதுக்கிவிடவேண்டும்.

**15. எம்மாவூருக்குச் செல்லும் வழியில் சோர்வாகச் சென்றுகொண்டிருந்த தம்முடைய இரண்டு சீடர்களுக்கு இயேசு வேதவாக்கியங்களை விளக்கிக் கூறியபோது என்ன ஆனது?**

**லூக்கா 24:32.** *வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டினபொழுது, நம்முடைய ________________ நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?*

**16. இந்த இரண்டு சீடர்களும் இயேசு உயிரோடிருக்கிறதை அறிந்து, அவர் தீர்க்கதரிசனங்களை விளக்கிக்கூறியதைக் கேட்டபோது என்ன செய்தார்கள்?**

**லூக்கா 24:33.** *அந்நேரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் ______________, பதினொருவரும் அவர்களோடிருந்தவர்களும் கூடியிருக்கக்கண்டார்கள்.*

**குறிப்பு:** வேதவாக்கியங்களை இயேசு விவரித்துக் கூறியதைக் கேட்டதுமே முதன்முதலாக இந்தச் சீடர்கள் செய்தது என்னவென்றால், மற்றவர்களோடும் அந்த நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள தீராத வாஞ்சைகொண்டார்கள். விறுவிறுப்பான இந்த வேதாகமப் பாடத்தொடரைப் படிக்க நீங்கள் உங்கள் நண்பர்களையும் இணைந்துகொள்ளச் செய்வீர்களென்று நம்புகிறோம்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

**வேதவாக்கியங்களை முற்றிலும் அறிந்துகொள்ளவும் அதன்படி நடக்கவும் நீங்கள் விரும்புகிறீர்களா?**

**பதில்:** ________________________________

## துணைப்பகுதி

***வேதாகமத் தீர்க்கதரிசனங்களில் அடையாளங்களாக வருகிற சில முக்கிய வார்த்தைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடையாளமும் தடித்த எழுத்துகளிலும், அதைத் தொடர்ந்து, அதன் அர்த்தமும் கொடுக்கப்பட்டுள்ளது.***

| | | |
|---|---|---|
| **தூதன்** | = தூதுவன் | தானி 8:16; 9:21; லூக் 1:19,26; எபி 1:14. |
| **பாபிலோன்** | = விசுவாசத் துரோகம்/குழப்பம் | ஆதி 10:8-10; 11:6-9; வெளி 18:2,3; 17:1-5. |
| **மிருகம்** | = ராஜ்யம்/அரசாங்கம்/ அரசியல் வல்லமை | தானியேல் 7:17,23. |
| **அப்பம்** | = தேவ வார்த்தை | யோவான் 6:35,51,52,63. |
| **தரிசனத்தில் 1 நாள்** | = ஒரு வருடம் | எசேக்கியேல் 4:6; எண் 14:34. |
| **வலுசர்ப்பம்** | = சாத்தான், அவனுடைய தொண்டர்கள் | ஏசா 27:1; 30:6; சங் 74:13,14; வெளி 12:7-9; எசே 29:3; எரே 51:34. |



| | | |
|---|---|---|
| **நெற்றி** | = மனது | ரோமர் 7:25; எசேக்கியேல் 3:8,9. |
| **கை** | = வேலை | பிரசங்கி 9:10. |
| **வேசி** | = பொய்யான சபை/பொய்மார்க்கம் | ஏசாயா 1:21-27; எரேமியா 3:1-3;6-9. |
| **தலைகள்** | = முக்கிய வல்லமைகள்/அரசர்கள்/அரசாங்கங்கள் | வெளிப்படுத்தல் 17:3,9,10. |
| **கொம்பு** | = ராஜா அல்லது ராஜ்யம் | தானி 7:24; 8:5,6,21,22; சக 1:18,19; வெளி 17:12. |
| **ஆட்டுக்குட்டி** | = இயேசு/பலி | யோவான் 1:29; 1 கொரிந்தியர் 5:7. |
| **விளக்கு** | = தேவ வார்த்தை | சங்கீதம் 119:105. |
| **சிங்கம்** | = இயேசு கிறிஸ்து | வெளிப்படுத்தல் 5:4-9. |
| **அடையாளம்** | = அங்கீகரிப்பின் முத்திரை அல்லது புறக்கணிப்பின் முத்திரை | எசே 9:4; ரோமர் 4:11; வெளி 13:17;14:9-11; 7: 2,3. |
| **மலைகள்** | = அரசியல் வல்லமைகள் அல்லது மத–அரசியல் வல்லமைகள் | ஏசா 2:2,3; எரே 17:3; 31:23; 51:24,25; எசே 17:22,23; தானி 2:35,44,45. |
| **எண்ணெய்** | = பரிசுத்த ஆவி | சகரியா 4:2-6; வெளி 4:5. |
| **சிவப்பு** | = பாவம்/தீமை | ஏசாயா 1:18; நாகூம் 2:3; வெளி 17:1-4. |
| **கன்மலை** | = இயேசு/சத்தியம் | 1கொரி 10:4; ஏசா 8:13,14; ரோமர் 9:33; மத் 7:24. |
| **முத்திரை** | = அங்கீகாரம் அல்லது புறக்கணிப்பின் அடையாளம் | ரோமர் 4:11; வெளி 7:2,3. |
| **சர்ப்பம்** | = சாத்தான் | வெளிப்படுத்தல் 12:9; 20:2. |
| **நட்சத்திரம்** | = தூதர்/தூதுவர் | வெளி 1:16,20; 12:4,7-9; யோபு 38:7. |
| **சூரியன்** | = இயேசு/சுவிசேஷம் | சங் 84:11; மல் 4:2; மத் 17:2; யோவான் 8:12; 9:5. |
| **பட்டயம்** | = தேவ வார்த்தை | எபேசியர் 6:17; எபிரெயர் 4:12. |
| **திருடன்** | = இயேசுவின் திடீர் வருகை | 1தெச 5:2-4; 2பேதுரு 3:10. |
| **காலம்** | = வருடம் | தானி 4:16,23,25,32; தானி 7:25; தானி 11:13. |
| **தண்ணீர்கள்** | = மக்கள் வசிக்கும் இடம்/ஜனங்கள், தேசங்கள் | வெளிப்படுத்தல் 17:15. |
| **வெள்ளையங்கி** | = வெற்றி/நீதி | வெளிப்படுத்தல் 19:8; 3:5; 7:14. |
| **காற்று** | = சண்டை/குழப்பம் | எரே 25:31-33; 49:36,37; 4:11-13; சக 7:13. |
| **நல்ல ஸ்திரீ** | = மெய்யான திருச்சபை | எரே 6:2; 2கொரி 11:2; எபே 5:23-27. |
| **மோசமான ஸ்திரீ** | = வழுவிப்போன சபை | எசே 15:15-58; 23:2-21; ஓசி 2:5; 3:1; வெளி 14:4. |

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com